முருகப்பெருமான் துணை

**மகான் நேச நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தவராசனே அரங்கா வாழ்க
தருமராசனே தேசிகா வாழ்க
அவனி காக்கும் சக்தியாக
அவதாரம் புரிந்த குருவே வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி இனிதே
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
தாழ்விலா பிலவ சிலை திங்கள்
தரணியிலே மூவாறுதிகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 18ம் நாள், 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் நேச நாயனார் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
ஆறுமுகனார் சக்தியாகவே
அரங்கன் ஞான தீட்சைவழி
4. வழிதனை ஏற்று வணங்கி
வழிமொழிந்து சன்மார்க்கமதை
தெளிவுபெற கடைபிடிக்க
தொடரும் இன்னல் விலகும்
5. விலகி மக்களுக்கு பாதுகாப்பு
வினவிட காரிய வெற்றிகள்
காலமதில் ஞானிகள் துணைபட
கலியுகத்தில் நடந்தேறும்
6. தேற்றம் தரும் மெய்ஞானமதை
தெய்வநெறியாக தந்தருளும்
ஆற்றல்மிக்க வழிகள்தனை
அகிலம் ஏற்றுப் பணிய
7. பணியவே நச்சுக்கிருமி வழி
பரவும் உயிர்பலி விலகும்
கனிவுபட ஆறுமுகன் இறங்க
கட்டாயம் எங்கும் எதிலும்
8. எதிலும் சக்தி கலந்துமே
எல்லாம் இறை செயலென
பூதலத்தில் சமத்துவ நிலை
பேதமிலா நல்லெண்ணம் கூடி
9. கூடியே நன்மை கூடும்
கொடுஞ் செயல்கள் இனிஇல்லா
நாடெங்கிலும் ஞான ஆட்சியாக
நடத்தப்பட்டு அமைதி காணும்

10. காணவே துறையூர் மண்ணை
கந்தனாக அருளும் அரங்கன்
ஞானவீட்டை கண்டடைந்து
நம்பிக்கை வைத்து வருகவே

11. வருகவே நல்லதே நடக்கும்
வருங்காலம் வளமாக மாறி
தருகின்ற குணம் தயவுபெருகி
தரணியெங்கும் தருமபலம் கூடும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–